**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.012283 / பி1 / 2022** **நாள் : 22 .08.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆகஸ்ட் 2022, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு – தனித்தேர்வர்கள் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் மூலம் விண்ணப்பங்களை ஆன்– லைனில் பதிவு செய்தல் – மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலகச் செய்திக்குறிப்பு நாள்:22.08.2022

*****

பார்வையில் காணும் இவ்வலுவலகச் செய்திக்குறிப்பில் நடைபெற்ற ஆகஸ்ட் 2022, பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு எழுதிய தனித்தேர்வர்கள் தங்களது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Ceritifcates) பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் **25.08.2022 (வியாழக்கிழமை) மற்றும் 26.08.2022 (வெள்ளிக் கிழமை)** ஆகிய இரு நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்கமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID, Password–ஐ பயன்படுத்தியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றியும் மேற்குறிப்பிடுள்ள நாட்களில் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று "click to access to online portal" என்ற வாசகத்தினை click செய்து திரையில் தோன்றும் "SSLC Aug 2022 – RT application for Registration" என்ற தலைப்பினை Click செய்து, USER–ID, Password–ஐப் பதிவு செய்த பின்னர் திரையில் தோன்றும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து, தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு மறுகூட்டல் விண்ணப்ப படிவம் வழங்கி மேற்படி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய மாணவர்களுக்கு அறிவுறுத்தி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மறுகூட்டலுக்கான கட்டணத்தை தேர்வர்கள் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>மறுகூட்டல் கட்டணம்:</u>**

| | | |
|---|---|---|
| பாடம் | : | (தொகை) |
| (ஒவ்வொன்றுக்கும்) | : | ரூ.205/– |

தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன்,இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்தவுடன் தேர்வர் அளித்த விண்ணப்பப் படிவத்தோடு அவ்விவரங்களை மீண்டும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன்பின்னரே Submit கொடுக்க வேண்டும். Submit செய்தவுடன் விண்ணப்ப எண், பதிவெண், விண்ணப்பித்த பாடங்கள், செலுத்த வேண்டிய தொகை ஆகியவை குறிப்பிட்ட ஒப்புகைச்சீட்டு (acknowledgement) Print ஆகிவரும். அந்த ஒப்புகைச் சீட்டில் கையொப்பம் மற்றும் முத்திரையிட்டு தேர்வரிடம் அளிக்க வேண்டும். ஒப்புகைச்சீட்டினை தேர்வர் மிக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள அறிவுறுத்த வேண்டும். ஒப்புகைச் சீட்டில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் மறுகூட்டல் முடிவுகள் பற்றி அறிய இயலும்.

ஒவ்வொரு நாளும் பணிமுடிந்தவுடன், **daily summary report / daily detailed report** இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவு செய்த விண்ணப்பங்களையும் தேர்வர்களிடமிருந்து பெறப்பட்டத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான 26.08.2022 **அன்று மாலை 05.00 PM மணிக்கு** விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT/ FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட மொத்த தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும். இந்த report –ஐ இரு நகல்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மறுகூட்டலுக்கு பெறப்பட்ட கட்டணத் தொகையினை www.karuvoolam.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி மறுகூட்டலுக்கான கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22731 – Retotalling & Revaluation |

மேற்கண்டவாறு தேர்வர்களின் மறுகூட்டல் கட்டணத் தொகையினை ஆன்லைனில் செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்களின் FINAL SUMMARY REPORT ஆகியவற்றினை இணைத்து திரு.ச.சீனிவாசன், துணை இயக்குநர் (பொது)(பொ), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 02.09.2022–க்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு :**
மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்

**நகல்:**

1 அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2 அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3 பி2, பி3, பி4, தொழில்நுட்ப பிரிவுகள் (அலுவலகம்)

} தகவலுக்காக